**<u>சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்</u>**

**முன்னிலை.** திரு.A.பாலகிருஷ்ணன்,B.A.,B.L.,

சார்பு நீதிபதி, கோபிசெட்டிபாளையம்

2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் நாள் வியாழக்கிழமை

**<u>இடைநிலை மனு எண்.03/2024</u>**

**<u>in</u>**

**<u>இடைநிலை மனு எண்.01/2021</u>**

**<u>in</u>**

**<u>அசல் வழக்கு எண்.38/2021</u>**

1.ராஜம்மாள்
2.பாப்பாத்தி
3.லோகேஸ்வரி
4.ஜீவானந்தம் .... மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள்

/இடையே/

பழனியம்மாள் ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பு கடந்த 10.03.2026–ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.R.சோமசுந்தரம்,M.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.R.S.பழனிசாமி,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>உத்தரவு</u>**

கடந்த 08.06.2023–ம் தேதியில் முடிக்கப்பட்ட இடைநிலை மனு எண்.1/2021 மனுவினை திரும்ப திறக்க வேண்டி மனுதாரர்கள்/வாதிகளால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>மனுதாரர் மனுவின் சுருக்கம்.</u>**

i) மனுதாரர் அசல் வழக்கில் 4–ம் வாதி ஆவார்.

ii) அசல் வழக்கானது பிரதிவாதி பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கானது வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

iii) தற்காலிக நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரி இடைநிலை மனு எண்.1/2021 தாக்கல் செய்யப்பட்டது. எதிர்மனுதாரர் கோபிச்செட்டிப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.143/2007 தாக்கல் செய்து மேற்படி வழக்கில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பெற்றுள்ளார். மேற்படி தீர்ப்பானது மனுதாரர்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது.

iv) எதிர்மனுதாரர் தீர்ப்பின் அடிப்படையில் வழக்கு சொத்தினை அளவிட தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். மேலும், வழக்கு சொத்தில் மனுதாரர்களின் அமைதியான அனுபவத்தை பாதிக்க பலவிதமான முயற்சிகளை செய்து வருகிறார். இடைநிலை மனு எண்.1/2021 ஆனது கடந்த 08.06.2023–ம் தேதியில் வழக்கு விசாரணைக்கு வரும் நிலையில் முடிக்கப்பட்டது.

v) எனவே, கடந்த 08.06.2023–ம் தேதியில் முடிக்கப்பட்ட இடைநிலை மனு எண்.1/2021 மனுவினை திரும்ப திறக்க வேண்டி மனுதாரர்கள்/வாதிகளால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.**<u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் எதிருரையின் சுருக்கம்.</u>**

i) மனுதாரரின் மனு பொய்யானதும், மோசடியானதும் என்றும், சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கக்கூடியதல்ல.

ii) எதிர்மனுதாரர் கோபிசெட்டிபாளையம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை மற்றும் தனிச்சுவாதீனம் கோரி அசல் வழக்கு எண்.143/2007–ஐ மனுதாரர்கள்/வாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து கடந்த 18.09.2010–ல் முதல்நிலைத் தீர்ப்பாணை பெற்றும், இறுதிநிலை தீர்ப்பாணைக்காக இடைநிலை மனு எண்.471/2016 தாக்கல் செய்து ஆணையர் மூலம் சொத்தை அளந்து பாகம் பிரிக்க வேண்டி கடந்த 2020–ல் சென்றபோது மனுதாரர்கள் ஆணையரையும், சர்வேயரையும், கிராம நிர்வாக அதிகாரி ஆகியோரையும் ஆயுதங்களைக் காட்டி மிரட்டி அளக்கவிடாமல் செய்து விட்டனர்.

iii) எதிர்மனுதாரர் கோபிசெட்டிபாளையம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் Police Protection கேட்டு மனு தாக்கல் செய்து உத்தரவு பெற்று சிறுவலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஒருவர், காவலர்கள் 3 நபர்களுடன் சென்று தாவாச் சொத்தை பார்வையிட்ட போது தாவாச்சொத்தை மனுதாரர்கள் மோசடியான பல கிரைய ஆவணங்கள் பதிவு செய்து தாவாச்சொத்தின் அமைப்பையும், செக்குப்பந்தியையும் மாற்றியுள்ளனர் என்பது தெரியவந்தது.

iv) கோபிசெட்டிபாளையம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.143/2007 கண்டுள்ள

சொத்தின் செக்குப்பந்தி முற்றிலும் வேறுபாடு உள்ளது. இதற்குக் காரணம் 4–ம் மனுதாரர் ஜீவானந்தம். 4–ம் மனுதாரர் அயலூர் கிராமத்தில் பல சொத்துக்களை மோசடியாக பத்திரப்பதிவு செய்துள்ளார். அவர் மீது சிறுவலூர் காவல்நிலையத்தில் பல புகார்கள் கொடுக்கப்பட்டு விசாரணை நிலுவையில் உள்ளது.

v) கோபிசெட்டிபாளையம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.143/2007 தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ஒப்புக்கொண்டு I.A.No: 471/2016 இறுதிநிலை தீர்ப்பாணை ஆணையர் மனுவில் விசாரணை முடிந்து ஆணையர் அறிக்கைக்காகவும், தாவாச்சொத்தின் செக்குப்பந்தியில் உள்ள Amendment க்காகவும் வாய்தா போடப்பட்டு நிலுவையில் உள்ளது. மனுதாரர்கள்/வாதிகள் கடந்த 18.09.2010–ல் பிறப்பிக்கப்பட்ட முதல்நிலைத் தீர்ப்பாணையின் பேரில் மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்யாமல் எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கு எண்.38/2021 வழக்கில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோர முடியாது.

vi) அசல் வழக்கு எண்.38/2021 வழக்கில் எதிர்மனுதாரரால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு எழுவினாக்களுக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையிலும், வழக்கு தாக்கல் செய்து சுமார் 3 ஆண்டுகள் முடிவடைந்த நிலையிலும் வழக்கின் நடவடிக்கையை இழுத்தடிக்கும் நோக்கத்துடன் இடைநிலை மனு எண்.1/2021 தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மனு கடந்த 08.06.2023–ல் Close செய்யப்பட்டதை Trial Stage–ல் Reopen செய்ய வேண்டிய அவசியம் ஏதும் கிடையாது. மனுதாரர்களின் அசல் வழக்கான அசல் வழக்கு எண்.143/2007–ல் கடந்த 18.09.2010–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை ரத்து செய்து எதிர்மனுதாரரின் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த மனுதாரர்களின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டுமாய் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3. இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4.**இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் இம்மனு அனுமதிக்கப்படதக்கதா ? அல்லது இல்லையா ? என்பதேயாகும்,**

**5. <u>தீர்வு</u>:–**

i) அசல் வழக்கானது, தாவா 2–வது அயிட்ட சொத்து 4–ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்ய கோரியும், கோபி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.143/2007 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வாதியை கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்ய கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும்

தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மேற்படி அசல் வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை வேண்டி வாதிகளால் இடைநிலை மனு எண்.01/2021 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii) இடைநிலை மனு எண்.1/2021 மனுவின் நாட்குறிப்பேட்டை பரிசீலனை செய்கையில், கடந்த 08.06.2023–ம் தேதியில் மனுதாரரின் மனு முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி முடிக்கப்பட்ட மனுவினை திரும்ப திறக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

iii) இடைநிலை மனு எண்.01/2021 மனுவில் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்ட பின்னர் கடந்த 08.08.2022, 26.09.2022, 21.11.2022, 19.12.2022 ஆகிய தேதிகளில் வழக்கு ஒத்தி வைக்கப்பட்ட போதும் மனுதாரர் தரப்பில் வாதுரை செய்ய முன்வரவில்லை. எனவே, கடந்த 08.06.2023–ம் தேதியில் மனு முடிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னிட்டு கடந்த 05.12.2024–ம் தேதியில் அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

iv) அசல் வழக்கானது 2021–ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். தற்போது அசல் வழக்கானது விசாரணைக்காக தயார் நிலையில் இருந்து வருகிறது. இந்நிலையில் மீண்டும் இடைநிலை மனு எண்.01/2021 முடிக்கப்பட்ட விசாரணையை திறந்தால் அதனால் வீண்கால தாமதம் ஏற்படும். அசல் வழக்கில் இருதரப்பினரும் தங்கள் தரப்பு சாட்சியத்தை முன்னிலைப்படுத்தி தீர்வு காண்பதே உகந்ததாக அமையும். எனவே, இடைநிலை மனு எண்.03/2024 அனுமதிக்கத்தக்கதல்ல என்று மேற்கண்ட பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

6) **எனவே முடிவாக,** மனுதாரரின் இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. மனு செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 26–ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

A BALAKRISHNAN Digitally signed by A BALAKRISHNAN Date: 2026.03.26 15:31:56 +0530

**சார்பு நீதிபதி,**
**கோபிசெட்டிபாளையம்.**

**குறிப்பு:–**

<u>இருதரப்பிலும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

A BALAKRISHNAN Digitally signed by A BALAKRISHNAN Date: 2026.03.26 15:32:07 +0530

**சார்பு நீதிபதி,**
**கோபிசெட்டிபாளையம்**